

தலைமைச் செயலகத்தில் நேற்று (19.12.2025) அமைச்சர் திருமதி என்.கயல்விழி செல்வராஜ் கடந்த 09.10.2024 அன்று லே (Leh) எல்லை கட்டுப்பாட்டு பகுதியில் OP SNOW LEOPARD (Leh) படைபணியின் போது வீரமரணமடைந்த தமிழ்நாட்டைச் சார்ந்த இளநிலை படை அலுவலர் பி.ஸ்டேன்லி என்பவரின் மனைவி திருமதி எஸ்.மேனகாவிடம் கார்கில் நிவாரண நிதியிலிருந்து கருணைத் தொகையாக ரூபாய் 40 இலட்சத்திற்கான காசோலையை வழங்கினார். இந்நிகழ்வில் பொது மற்றும் மறுவாழ்வுத் துறை செயலாளர் திருமதி ரீட்டா ஹரீஷ் தக்கர், கூடுதல் செயலாளர் கி.பாலசுப்ரமணியம் மற்றும் துறை சார்ந்த அலுவலர்கள் உடனிருந்தனர்.

### "என் வாக்குச் சாவடி வெற்றி வாக்குச் சாவடி" - வட்டச் செயலாளர் சி.பி.திருமலை தலைமையில்

# அண்ணாநகர் 101 (அ) வட்ட தி.மு.க. சார்பில் பாக வாரியாக ஆலோசனைக் கூட்டம்!

### நே.சிற்றரசு - தயாநிதி மாறன்– எம்,கே,மோகன் – ச,பரமசிவம் – வி,கௌதமன் – கார்த்திக் மோகன் – மெட்டில்டா கோவிந்தராஜ் பங்கேற்பு!

சென்னை, டிச. 20

அண்ணாநகர் வடக்கு பகுதி, 101 (அ) வது வட்டக் கழகச் செயலாளர் சி.பி.திருமலை விடுத்துள்ள அறிக்கை வருமாறு:

சென்னை மேற்கு மாவட்டம், அண்ணாநகர் வடக்கு பகுதி, 101 (அ) வது வட்ட தி.மு.க. சார்பில் "என் வாக்குச் சாவடி வெற்றி வாக்குச் சாவடி" பாக வாரியாக செயல்திட்ட ஆலோசனைக் கூட்டங்கள் நடைபெறுகிறது.

இக்கூட்டங்களில் சென்னை மேற்கு மாவட்டக் கழகச் செயலாளர், சென்னை மாநகராட்சி பணிகள் குழுத் தலைவர் நே.சிற்றரசு எம்.சி, மத்திய சென்னை நாடாளுமன்ற உறுப்பினர், கழக விளையாட்டு மேம்பாட்டு அணிச் செயலாளர் தயாநிதி மாறன், அண்ணாநகர் சட்டமன்ற உறுப்பினர், தலைமை செயற்குழு உறுப்பினர் எம்.கே.மோகன், அண்ணா நகர் வடக்கு பகுதிக் கழகச் செயலாளர் ச.பரமசிவம், அண்ணாநகர் தொகுதி தேர்தல் பார்வையாளர், கழக விளையாட்டு மேம்பாட்டு அணி துணைச் செயலாளர் வி.கௌதமன், கழக தகவல் தொழில்நுட்ப அணி துணைச் செயலாளர் கார்த்திக் மோகன், 101 வது வார்டு மாமன்ற உறுப்பினர் மெட்டில்டா கோவிந்தராஜ், 101 (அ) வது வட்டப் பாக ஒருங்கிணைப்பாளர், மாவட்ட பொறியாளர் அணி அமைப்பாளர் ச.அசோக்குமார், மாவட்ட வழக்கறிஞர் அணி துணை அமைப்பாளர் எஸ்.விஜயகுமார் ஆகியோர் கலந்து கொண்டு சிறப்பிக்கின்றனர்.

101 (அ) வது வட்டத்தில் கீழ்க்காணும் தேதிகளில் பாகக் கூட்டங்கள் நடைபெறும் விவரம் வருமாறு:

இன்று (20.12.2025 சனிக்கிழமை) மாலை 6 மணியளவில், கதிரவன் காலனி, 69, 85, 86, 87, 88 ஆகிய பாகங்களுக்கு கூட்டம் நடைபெறுகிறது.

நாளை (21.12.2025 ஞாயிற்றுக்கிழமை) மாலை 6 மணியளவில், திருவீதி அம்மன் கோயில், 1 வது தெரு, 89, 90, 91, 92, 93 ஆகிய பாகங்களுக்கு கூட்டம் நடைபெறுகிறது.

நாளை மறுநாள் (22.12.2025 திங்கட் கிழமை) மாலை 6 மணியளவில், லட்சுமி டாக்கிஸ் ரோடு, 99 வது பாகக் கூட்டத்தில் எம்.கே. மோகன் எம்.எல்.ஏ. கலந்து கொண்டு சிறப்புரை ஆற்றுகிறார்.

நாளை மறுநாள் (22.12.2025 திங்கட்கிழமை) மாலை 7 மணிக்கு, ராமையா தெரு, அமைந்தகரை, 94, 95, 96, 97, 98, 124 ஆகிய பாகங்களுக்கு கூட்டம் நடைபெறுகிறது.

இக்கூட்டத்திற்கு பாகத்திற்கு உட்பட்ட கழக நிர்வாகிகள், BLA2, BLC, BDA, BYO அனைவரும் தவறாமல் கலந்து கொண்டு சிறப்பிக்குமாறு வட்டக் கழகச் செயலாளர் சி.பி.திருமலை கேட்டுக்கொண்டுள்ளார்.



திருப்போரூர் வடக்கு ஒன்றியம்,கானத்தூர் ஊராட்சியில் என் வாக்குச்சாவடி வெற்றி வாக்குச்சாவடி கூட்டம் பாகம் 29,30,31,32,33–ல் ஒன்றிய செயலாளர் எல்.இதயவர்மன் தலைமையில் நடைபெற்றது.இதில் தலைமை செயற்குழு உறுப்பினர் சோ.அன்புச்செழியன்,மாநில பொறியாளர் அணி துணைச் செயலாளர் சி.பிரதீப், ஊராட்சி மன்ற தலைவர் வள்ளி எட்டியப்பன்,வட்டக் கழக செயலாளர்கள் சௌந்தரபாண்டியன், சகாதேவன், ரியாஸ் உள்ளிட்ட BLA 2, BDA, BLC அனைத்து கழக நிர்வாகிகள் பங்கேற்றனர்.

### முதல்வர் மு.க.ஸ்டாலின் பிறந்தநாளையொட்டி

# "அன்னம் தரும் அமுதகரம்" 303 வது நாள்!

### அம்பத்தூர் வடக்கு பகுதியில் உணவு வழங்கப்பட்டது!



சென்னை, டிச.20-

முதலமைச்சர் அவர்களின் 72வது பிறந்த நாளை முன்னிட்டு சென்னை கிழக்கு மாவட்ட திமுக சார்பில், 2025 பிப்ரவரி 20ஆம் தேதி முதல், 2026 பிப்ரவரி 19ஆம் தேதி வரையிலான 365 நாட்களும், நாள் ஒன்றுக்கு 1000 நபர்களுக்கு காலை உணவு வழங்கும் சிறப்புமிகு "அன்னம் தரும் அமுதக்கரங்கள்" மாபெரும் திட்டத்தின் 303 ஆம் நாளான - கழகத் தலைவர் தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் இனிய பிறந்தநாளை முன்னிட்டு நேற்று (19.12.2025), அம்பத்தூர் வடக்கு பகுதி: 1) வட்டம் 79 அ, மாசிலாமணீஸ்வரர் தெரு, ஏரிக்கரை சாலை, வெங்கடேஸ்வரா நகர் அம்பத்தூர், 2) வட்டம் 79, A.K நகர் ஆயிரம் காத்தம்மன் கோயில் அருகில், ஒரகடம் சென்னை ஆகிய பகுதிகளில் இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் பி.கே.சேகர்பாபு அவர்களின் வழிகாட்டுதல்படி, தமிழ்நாட்டு நலன்களையும், எதிர்காலத்தையும் யாருக்காவும், எதற்காகவும் விட்டுத்தர மாட்டோம். தமிழ்நாட்டின் உரிமைகளுக்காக ஒன்றுபட்டு போராடுவோம். தமிழ்நாடு போராடும், தமிழ்நாடு வெல்லும் - இதுதான் ஒரே இலக்கு!" என்ற உறுதிமொழியை ஏற்று பொதுமக்களுக்கு காலை உணவு வழங்கப்பட்டது.

இந்நிகழ்ச்சியில் ஜோசப் சாமுவேல் எம்.எல்.ஏ, எஸ்.பி. ராஜகோபால் எம்.சி, எம்.டி.ஆர். நாகராஜ், பி.கே.மூர்த்தி. எம்.சி, டாக்டர்.ஜி சாந்தகுமாரி எம்.சி, எல்.பி. எஃப்.மோகன், டாக்டர் பூர்ணிமா எம்.சி, ரமேஷ் (எ) நீலகண்டன் எம்.சி, து.ஆயிரம், ஜி.வி.நாகவள்ளி எம்.சி, கு.கிருஷ்ணமூர்த்தி. அம்பத்தூர் வடக்கு/தெற்கு/கிழக்கு வட்ட கழக செயலாளர்கள்: வி.ரவிந்திரன், பு.வீரா(எ) வீரராகவன், வெ. ராதாகிருஷ்ணன், த. கண்ணபிரான், எம்.கமல் எம்.சி, டி.பிரகாஷ் தயாளன், சி.சீனிவாசன், எம்.ஈ.சேகர் எம்.சி, நா. நெப்போலியன், ஆர். டீக்கா, மு.சண்முகம், ஆ.சுந்தரராஜ், லோகநாதன், சு.மோகன்குமார், மு.விஜயகுமார், த.வ. லால், பி.செந்தில். ஒருங்கிணைப்பாளர்கள்: சொ.வேலு, S.முரளி, பெரம்பூர் R.ராஜன், K.R.அபரஞ்சி, அசோக் ஜெயின், P.விஜயகுமார், ம. அசோக்குமார், L. சம்பத்குமார், க.பா. பிரதீப்குமார் மற்றும் கழக நிர்வாகிகள், கழக முன்னோடிகள் கலந்து கொண்டனர்.



சென்னை வடக்கு மாவட்டம் ராயபுரம் கிழக்கு பகுதி 49வது வட்டத்தில் பாகம் 33, பாகம் 34, பாகம் 35 என் வாக்குச்சாவாடி வெற்றி வாக்குச்சாவடி ஆலோசனை கூட்டம் வட்ட கழக பொறுப்பாளர் க. கலைசெல்வன் தலைமையில் பகுதி செயலாளர் இரா செந்தில்குமார் முன்னிலையில் சட்டமன்ற உறுப்பினர் ஐட்ரீம் இரா. மூர்த்தி ஆலோசனைகள் வழங்கி சிறப்புரையாற்றினார். உடன் த.ஜெயபாலன், எல்.சீனிவாசன், எல்.கிருஷ்ணஹரிஹரன், எம்.பழனி, எம்.வி.நரசு மணி, அ.குமார், கே.ஆர்.கோபிநாத், ஜி.கோதண்டன், த.கு. பன்னீர்செல்வம், பா.சுதாகர், ஏ.கதிரவன், கே.பாஸ்கர், எம்.மோகன் பாபு, கே.பாலகிருஷ்ணன், சி.ஏ. மகேஷ் குமார், எஸ்.பாரதிதாசன், முத்துக்குமார் ஜி.ரேவதி, ஜி.விநாயகமூர்த்தி, வி.கலைச்செல்வன், எம்.தங்கராஜ், எஸ்.சங்கர், மோகனசுந்தரம், கு.பாரத், கன்னியப்பன், ஜெ. நிஜந்தன், ம.வெ.வேலு, கே.அரசு, எஸ்.விக்னேஷ், வி.சின்னசாமி, வி.சிவசங்கரன், கே.கிருபாகரன் மற்றும் கழகத் தோழர்கள் கலந்து கொண்டனர்.


